# வடகிழக்கில் நாளை மாபெரும் எழுச்சிவிழாக்கள்

தியாக மரணமடைந்த அன்னை பூபதியின் இரண்டாம்ஆண்டு நினைவுதினமான நாளை வவுனியா மாவட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம், அலங்கார பவனிகள் என்பன நடைபெற ஏற்பாடாகியுள்ளது. சகல ஊர்வலங்களும் வவுனியா நகரசபையை வந்தடையும். இதேவேளை நகரின் வீதிகள் கட்டிடங்கள் அலங்கரிக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஏற்பாடுகளை வவுனியா சிற்றூரவைப் பிரதிநிதிகள் மேற்கொண்டு வருகின்றனர் இதேசமயம் மட்டக்களப்பில் நாளை பல எழுச்சி ஊர்வலங்கள் நடாத்தப்படவுள்ளன. மட்டு. இந்துக் கல்லூரியில் மாபெரும் கூட்டம் ஒன்றும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அன்றைய தினம் கருவேப்பங்கேணி வீடமைப்புத்திட்டத்திற்கு அன்னை பூபதி சதுக்கம்எனப் பெயரிடப்படவுள்ளது. அருகிலுள்ள வீதி ஒன்றிற்கும் அன்னை பூபதிவீதி எனப் பெயரிடப்படவுள்ளது இதேசமயம் இதுவரை நடைபெற்றுவந்த பல சுழற்சிமுறை உண்ணாவிரதங்களும் முடித்து வைக்கப்படவுள்ளன. யாழ் மாவட்டத்தில் அன்னை பூபதி நினைவு நாளை விமரிசையாக நடாத்த விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வீதிகள் யாவும் அலங்கரிக்கப்பட்டுள்ளன நாளை நல்லூரில் மாபெரும் எழுச்சிக் கூட்டம் ஒன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் உரையாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11, 05, 03)


பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 72 புதன் 18-04-1990 (சித்திரை 05) ரமழான் 21


# வடகிழக்கு பயிலுநர் ஆசிரிய தெரிவு ஊழல்கள் குறித்து மேல்விசாரணை

## தகுதியற்றோர் நியமனம் பெற்றிருப்பின் அவர்கள் பதவியிழக்க வேண்டிவரும்

வடக்கு – கிழக்கில் பயிலுநர் ஆசிரியர் தெரிவில் பல ஊழல்கள், மோசடிகள் நடைபெற்றுள்ளதாக அமைச்சுக்கு புகார்கள் கிடைத்துள்ளது கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணையினை மேற்கொள்ளும்படி தாம் கல்விச் சேவைகள் ஆணைக் குழுவுக்கு தெரியப்படுத்திபிருப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் முரசொலிக்கு வவுனியாவில் வைத்துக் கூறினர்.

விசாரணைகளின் போது தகுதியற்றவர்களுக்கு, நியமனம் வழங்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்படின் அவர் பதவியினை இழக்க நேரிடும்.

இவ்விடயத்தில் தாம் கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நியமனத்தில் கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு கூடிய முன்னுரிமை கொடுக்கும் படி பணிக்கப்பட்ட போதும் அவ்வாறு நடைபெறவில்லை என்பதும் தமக்கு கிடைத்த புகார்களிலிருந்து தெரியவருகின்றன என்றும் குறிப்பிட்டார். (11)

## பயிலுநர் ஆசிரியர் தெரிவுபற்றி மேன்முறையீடு மே மாதத்தில்

பயிலுநர் ஆசிரியர்முதலாம் பட்டியலில் தெரிவுசெய்யப்பட்டு இரண்டாம்பட்டியலில் விடுபட்டோரின் மேன்முறையீடுகள் மேமாதம் முதல்வாரத்தில் ஆராயப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முரசொலிபலதடவைசெய்தி வெளியிட்ட காரணத்தினாலே இரண்டாம்பட்டியலில் விடுபட்டோரின் மேன்முறையீடுகள் யாழ் கல்வித்திணைக்களத்தினால் ஏற்கப்பட்டது தெரிந்ததே.

இவர்களுக்கான மேன்முறையீடுகள் ஆராயப்பட்டு தகுதி இருக்குமாயின் இவர்க

— 8 ம் பக்கம் பார்க்க

## கிராமசேவகர் ஊழல்கள் புலிகள் கடும் நடவடிக்கை

கிராம சேவை அலுவலர்களது மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்கள் தாமாகவே பதவிவிலகிக் கொண்டவர்களாகவே கருதப்படுவார்கள். இவர்களின் குற்றத்தை கண்டு பிடிக்கவென ஒரு பிரத்தியேக குழு ஒன்று விரைவில் நியமிக்கப்படும்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு ஸ்ரான்லி டொமினிக் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெற்ற கலந்துறையாடல் ஒன்றில்

...8 ஆம் பக்கம் பார்க்க

## மந்திகை வைத்தியசாலை நிர்வாகச் சீர்கேடு நீராவி அடுப்பு பாவனையின்றி துருப்பிடிப்பு

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை நிர்வாகச் சீர்கேட்டினால் சுமார் நான்கு லட்சம் பெறுமதியான நீராவி அடுப்புத் துருப்பிடிக்கின்றது.

வடமராச்சியிலுள்ள ஒரேயொரு நிராவியடுப்பு இதுவாகும். 1978-ம் ஆண்டு பொருத்தப்பட்ட மேற்படி அடுப்பு 1983-ம் ஆண்டு சிறு திருத்த வேலை காரணமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

1990-ம் ஆண்டுவரை எவ்வித திருத்தவேலைகளும் செய்யாமையால் மேற்படி இயந்திரங்கள் துருப்பிடித்துள்ளன. இதே காலத்தில் பொருத்தப்

— 8 ம் பக்கம் பார்க்க

## 764, 769, 751, 789, 788 இலக்க பஸ்சேவை இரவு 10 மணிவரை நடைபெறும்

வடபிராந்திய போக்குவரத்துச் சேவையின் உள்ளூர் பஸ் சேவைகள் நேற்றுமுதல் இரவு 10 மணிவரை இடம்பெற்றன. எனினும் குறிப்பிட்ட பஸ்களே இரவு 10 மணிவரைசேவையில் ஈடுபடுத்தப்படுமெனவும் படிப்படியாகவே இச்சேவை விஸ்தரிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இரவு 10 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள உள்ளூர் பஸ் சேவைகளின் விபரம் வருமாறு. 769 கீரிமலை 764 வசாவிளான் 769 கொடிகாமம் குறிகட்டுவான் ஊர்காவற்றுறை 751 பருத்தித்துறை 789 அராலி பண்டத்தரிப்பு788சண்டிலிப்பாய்கீரிமலை

படிப்படியாகவே சேவைகள் அதிகரிக்கப்பட்டு தூரஇட பஸ் சேவை பற்றிய விபரம் வெளியிடப்படுமென போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவித்தன. 3

## இறக்குமதி விதை வெங்காயம் பயிரிடுவதற்குத் தரமற்றது

சிறு போகத்திற்கென வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை வெங்காயம் தரமற்றதென ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது இறக்குமதி செய்யப்பட்ட ஏழாயிரம் கிலோ வெங்காயமும் பயிரிடுவதற்கு தகுதியற்றது என விவசாயத் திணைக்களம் செய்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது

## மட்டக்களப்பில் வீதி ஒழுங்கை மக்கள் அனுசரிக்கக்கோரிக்கை

மட்டக்களப்பு வீதி ஒழுங்கை மக்களே கடைப்பிடித்து நடக்குமாறு விடுதலைப்புலிகள் கேட்டுள்ளனர். வீதி விபத்துகளைத் தடுப்பதற்கு பொதுமக்கள் தம்முடன் ஒத்துழைக்குமாறும் விடுதலைப்புலிகள் கேட்டுள்ளனர்:

இதேவேளை மட்டுநகர் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இருந்த வாகனவேகத்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## 1954ற்கு பின் பிறந்தவருக்கு பிறப்பு சான்றிதழ் தட்டுப்பாடு

இன்னும் ஓரிரு தினங்களில் 1954ம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்களுக்குபிறப்புச்சாட்சிப்பத்திரம் வழங்க முடியாது போகுமென யாழ் செயலகவட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

1954ம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்களுக்கான பிறப்புச் சாட்சிப்பத்திரம் எழுதும் இருபக்கபத்திரம் ஓரிருதினங்களில்

—8ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் நடைபெறும் மேதின ஐ. தே. கட்சி கூட்டத்திற்கு வன்னியிலிருந்து 200பேர் பங்கு

கொழும்பில் இம் முறை நடைபெறவுள்ள ஐக்கிய தேசியகட்சியின் மேதினஊர்வலக் கூட்டத்தில் வன்னிப் பகுதியிலிருந்தும் சுமார் 200 பேர் கலந்து கொள்வார்கள்

தமிழ், சிங்கள, முஸ்லீம் ஐக்கியதேசியகட்சிஉறுப்பினர்களே மேதின வைபவத்தில் கலந்து கொள்ளச் செல்ல திட்டமிட்டுள்ளனர்.

—8 ஆம் பக்கம் பார்க்க

## வன்னி நகர சபைகட்டிடத்தில் உள்ள பொலிசார் வெளியேற்றம்

வவுனியா நகர சபைக்கட்டிடத்தில் நிலை கொண்டுள்ள இலங்கைப் பொலிஸார் இம் மாத முடிவிற்குள் அங்கிருந்து வெளியேறவிருப்பதாகநம்பத்தகுந்தவட்டாரங்கள் கூறின.

இக் கட்டிடத்தினை மீளவும் வவுனியா நகரசபை பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த சுமார் ஏழாண்டு

—8 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு கச்சேரி பொலிஸ் நிலையம் மூடப்பட்டது

மட்டக்களப்பு கச்சேரியில் இயங்கி வந்த பொலிஸ் நிலையம் நேற்று மூடப்பட்டது இப்பொலிஸ் நிலையம் கச்சேரியில் உள்ள இலங்கை வங்கி பாதுகாப்பிற்கு என்றே இதுவரை அங்கிருந்தது.

இதே சமயம் நான்காவது நாளாக நேற்றும் மட்டுநகரில் பொலிஸார் வெளியில் நடமாடவில்லை. (05)

## பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்தில் பழுதடைந்த மின்தறி நாலைவகைகள் 25.04-90 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அலுவலக வளவில் வைத்து பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும். விரும்பியோர் அலுவலக நேரத்தில் வந்து பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. க, சங்கம்,
பண்டத்தரிப்பு.

04175



## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1918 . 01 . 23

மறைவு 1988 . 04 . 09

திருமதி. கணபதிப்பிள்ளை நாகம்மா
(கிளாப்பாவிய ஆசிரியை)

அன்பெனும் நதியினிற் குளிக்க வைத்தாய்!
அறிவு ஜோதியிற் ஒளிர வைத்தாய்!
உன் இதயத்தில் எங்களைப் பிணைத்து வைத்தாய்!
இமையைப் போலெமை அணைத்து வைத்தாய்!
இன்று இறப்பினில் எங்களைத் தவிக்க வைத்தாய்!

லட்சுமி
சண்டிலிப்பாய்

கணவன்.
பிள்ளைகள்.
பேரப்பிள்ளைகள்.


# மன்னார் மாவட்ட மீனவர் சமுதாய நலன் நடவடிக்கை

மன்னார் திட்டமிடல் பிரிவு மூலமாக சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் வங்காலையில் பாரிய இறால் வளர்ப்புத் திட்டம் ஆரம்பமாகவுள்ளது.

அதேவேளை பேசாலையில் ஐஸ்கட்டித் தொழிற்சாலையை ஆரம்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கடற்றொழில் நிர்வாக அமைச்சர் திரு. யோசெப் மைக்கல் பெரேராவுடன் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாஜத் தலைவர் அருட்திரு ஜே. பி. தேவராஜ் நடத்திய சந்திப்பின்போது தகவல் வெளியானது.

மன்னார் மாவட்ட மீனவ சமுதாயம் தங்கள் தொழிலில் முன்னேற்றம் அடைய மீனவ கூட்டுறவு அமைப்பில் கைகோர்க்கப்படவேண்டும் என அமைச்சர் தன்னைச் சந்தித்த குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் மன்னார் பகுதிக்கு ஆழ்கடலில் தங்கியிருந்து மீன் பிடிக்கும் இரண்டு பாரிய இயந்திரப் படகுகள் கடற்றொழில் அமைச்சின் மூலம் தருவிக்கவும் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக அருட்திரு தேவராஜ் கூறினார்


## ஆசிரியர்கள் காசாளர் தேவை

தமிழ், ஆங்கிலம், தட்டச்சு சுருக்கெழுத்து வகுப்புக்களுக்கும் 9, 10, 11-ம் ஆண்டு தமிழ், சமயம் 6, 7, 8-ம் ஆண்டுகளுக்கு விஞ்ஞானம் ஆங்கிலம் கற்பிப்பதற்கும் காசாளராக கடமையாற்றுவதற்கும் 25-04 90 புதன்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும் 1 - 5 - 90-ல் நேர்முகப்பரீட்சை நடைபெறும்.

வாணி கல்வி நிலையம்
கே. கே. எஸ் வீதி
சுன்னாகம்.

04172



## அணையாத தீபம்!

அன்னை பூபதி தமிழ்த்தாயே!
அணையா தீப மாகினாயே!
தன்னையே இனமோங்க அழித்தாயே!
தமிழினத்தை யதனாலி ணைத்தாயே!
மானம் பெரிதெனக் கொண்டாயே!
பறத்தி நீ வெற்றி அதிற் கண்டாயே
தானந்தவந் தருமுயர் பேற்றியே!
தியாகத்தா லெளிதில டைந்தாயே!

161, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை.
உ. இ. தமிழ்ச்செல்வன்

04174


## மாநாடு

தலை மன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்வது சம்பந்தமாக தலை மன்னார் துறைமுகத்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் ரயில்வே. குடிவரவு குடியகல்வு, சுங்க, பொலிஸ். கடற்படை சுகாதார அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

இந்திய - இலங்கை அரசு அமைதிப்படை வெளியேறிய பின் தங்களது நல்லுறவை பிரதிபலிக்கும் பொருட்டு இந்தக் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்வியங்காட்டில் திருட்டு

கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபரின் அறை உடைக்கப்பட்டு அங்கிருந்த குத்துவிளக்கு, மணிக்கூடு, சேமக்கலம், றபர்சில் மற்றும் பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. இது பற்றி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும், விடுதலைப்புலிகளிடமும் அதிபர் முறைப்பாடு செய்துள்ளார். விடுதலைப் புலிகள் பாடசாலைக்கு சென்று பார்வையிட்டனர்.

சில நாட்களுக்கு முன்னர் இப்பாடசாலைக்கு அண்மையில் உள்ள ஆலயக் குருக்கள் ஒருவரின்வீட்டிலும் சுமார் ஐந்தரை அடி உயரமுள்ள குத்து விளக்கின் சில பாகங்களும் களவாடப்பட்டிருந்தன. 53


# மக்கள் வங்கி

## அடகு நகைகள் மீளளித்தல்

பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் கீழ்க்கண்டவாறு மீளளிக்கப்படும்.

**யாழ். மாவட்டக் கிளைகள்:-** வழங்கும் திகதி 1990.04.20- வெள்ளிக்கிழமை
வழங்கும் இடம் - யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம், (யாழ். கோட்டைக்கு அருகில் அமைந்துள்ளது )

1. யாழ். பிரதான வீதிக் கிளை
   புங்குடுதீவுக் கிளை -1989.10.12. திகதிவரை பணம் செலுத்தியவர்களுக்கு.
2. யாழ். நவீன சந்தைக் கிளை - 1989.10.10 திகதிவரை பணம் செலுத்தியவர்களுக்கு.
3. சாவகச்சேரிக் கிளை
   பளைக் கிளை - 1989.10. 15 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
4. யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை - 1989.10.15வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
5. யாழ் கன்னாதிட்டிக் கிளை
   சங்கானைக் கிளை - 1989.10.12 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
6. சுன்னாகம் கிளை - 1989.10.11 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
7. காங்கேசந்துறைக் கிளை - 1989.10.12 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
8. வல்வெட்டித்துறைக் கிளை- 1989.10.18 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
9. ஊர்காவற்றுறைக் கிளை - 1989.09.25 வரை பணம் செலுதகியவர்களுக்கு.
10. பருத்தித்துறைக் கிளை
    நெல்லியடிக் கிளை - 1989.09.19 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.

**கிளிநொச்சி மாவட்டம்:** வழங்கும் இடம் - கிளிநொச்சி தபாற் காரியாலயம்.

| | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|
| 1. | பரந்தன் கிளை - (1989.09.28வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990. 04. 20 | வெள்ளி |
| 2. | கிளிநொச்சிக் கிளை (1989.06 26வரை பணம் செலுத்திபவர்களுக்கு) | 1990. 04. 24 | செவ்வாய் |

**முல்லைத்தீவு மாவட்டம்:**

முல்லைத்தீவுக் கிளை. இக்கிளையில் அடகுவைத்த நகைகளை மீளப் பெறுவதற்காக 1989 9 21 திகதி வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் முல்லைத்தீவு ஜெசி தியேட்டரில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் விசேட கரும பீடத்தினூடாக மீளளிக்கப்படுகின்றது.

மாங்குளம் கிளை. இக்கிளையில் அடகுவைத்து மீளப் பெறுவதற்காக 1989 10 22. வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 18-ம் திகதி முதல் (புதன் கிழமை) மாங்குளம் மக்கள்வங்கியில் வைத்து மீளளிக்கப்படும்.

**வவுனியா மாவட்டம்**

வவுனியாக் கிளை. இக்கிளைக்குரிய 1ஆம் கட்ட நகைகள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைத்து இம்மாதம் 18ஆந் திகதி முதல் மீளளிக்கப்படும்

**மன்னார் மாவட்டம்**

மன்னார் கிளை. இக்கிளையில் அடகுவைத்து மீளப் பெறுவதற்காக 1989. 09. 21 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 20ஆந் திகதி முதல் மன்னார் மக்கள் வங்கி கிளையில்வைத் துமீளளிக்கப்படும்.

முருங்கன் கிளை: இக்கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 1989.09.21 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 25ஆந் திகதி முதல் (புதன்கிழமை மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்,

பிராந்திய முகாமையாளர்

மக்கள் வங்கி, பிராந்தியத் தலைமையகம்
யாழ்ப்பாணம்

04165

## தொலைத் தொடர்பு

ஒரு பிராந்தியத்தின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாதது போக்கு வரத்து, மின்சாரம், தொலைத் தொடர்பு களுமாகும்.

இன்று வடக்கு-கிழக்கின் தொலைத் தொடர்பானது தொலைத் தொடர் பாகவே இருக்கிறது.

புனர்வாழ்வு, அபிவிருத்தி வேலைகள் இன்று வடக்கு-கிழக்கில் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரச அதிகாரிகளின் மேல் மட்டத்தொடர்புகள் மிக அத்தியாவசிய மாகின்றது.

இதற்கு வெளி மாவட்டங்களுடனான தொலைத்தொடர்பு மிக அவசியமாகிறது.

இன்று பல திணைக்களங்கள் நேரடித் தொலைபேசி வசதிகளின்றி உள்ளன.

இதனால் நேர விரயத்துடன் மேலதிக செலவுகளும் அத் திணைக்களங்களுக்கு ஏற்படுகின்றன.

இன்று வடக்கில் மீண்டும் சுமுக நிலை தோன்ற ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் மீண்டும் பல தொழிற்சாலைகளும், பெரிய வர்த்தகநிலையங்களும் இயங்கத் தொடங்கியுள்ளன.

வடக்கானது வர்த்தகத்தில் பெரும்பாலும் தெற்கையே நம்பியுள்ளது.

வடக்கின் விளைபொருட்களைச் சந்தைப் படுத்தத் தெற்கு அவசியமாகிறது.

# இதயநாதம்

புதன்கிழமை 18--04--1990

நல்வாக்கு

உங்களில் ஒருவர் மற்றவர்களின் பொருட்களை அநியாயமாக எடுக்காதீர்கள். இதனால் உங்களை நீங்களே அழித்துக் கொள்கிறீர்கள்.

-திருக்குர்ஆன்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

அதேபோல் வடக்கின் சந்தைப்படுத்தப் படும் பொருட்களின் கொள்வனவிற்குத் தெற்கு அவசியமாகிறது.

இதனால் வடக்கு வர்த்தகர்களுக்குத் தொலைபேசி என்பது மிகவும் அவசியமான தொன்றாகிறது.

தற்போது யாழ் நகரில் உள்ள ஒரு சில வர்த்தகர்கள் மட்டுமே தொலைபேசி வசதிகளைக் கொண்டுள்ளனர்.

இதனால் ஆயிரக்கணக்கான வடபகுதி வர்த்தகர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

மேலும், இன்று வடபகுதியில் உள்ள தொண்ணூறு வீதமான குடும்பங்களில் யாராவது ஒருவர் வெளிநாடு ஒன்றில் வசிப்பவராகவே உள்ளார்.

இதனால் வெளிநாட்டுடனான தொலைபேசித் தொடர்பு வடக்கிற்கு மிகமிக அவசியமாகிறது.

இக் குடும்பங்கள் வெளிநாட்டிலுள்ள தமது உறவுகளுடன் தொடர்பு கொள்ள வவுனியா, கொழும்பு என்று செல்ல வேண்டியுள்ளது.

இதனால் வீண் செலவும், கால தாமதமும் ஏற்படுகின்றது.

இதேசமயம் தற்போது நூறு இணைப்புகளுடன் இயங்கும் யாழ் பரிவர்த்தனை நிலையமானது வன்செயலில் சேதமடைந்த நிலையில் உள்ளது.

உடன் இதைத் திருத்தி 24 மணி நேரம் கடமைபுரியும் ஊழியர்களுக்கு சகல வசதிகளையும் திணைக்களம் செய்து கொடுக்க வேண்டும்.

தொலைபேசிக் கம்பிகளின் களவும் இன்று அதிகரித்து வருகின்றது.

இதுவும் உடன் தடி எடுக்கக் கூடியவர்களால் தடுக்கப்படவேண்டும்.

வடபகுதிக்கும், கிழக்குப் பகுதிக்கும் விரைவில் ஆயிரம் புதிய நேரடித் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாகச் செய்திகள் அடிபடுகின்றன.

இவை வெறும் செய்தியாக இல்லாது விரைவில் வடக்கு-கிழக்கிற்கு ஆயிரம் நேரடித் தொலைபேசி இணைப்புகள் வருவதற்கான ஒழுங்குகளைச் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்வார்களா?

### வியாபித்த நலன் கருதி யாழ்ப்பாணத்திற்குத் தேவை

# சகல நவீன வசதிகளும் கொண்ட

# புதிய போதனா வைத்தியசாலை

**பயனுள்ள மருத்துவர்களை நாம் உருவாக்க வேண்டும. இவ்விலக்கை அடைவதற்கு ஒரே ஒரு வழி மருத்துவப் பீடத்திற்கு அருகாமையில் பேராசியர்களுக்தும சுகாதாரத்துறை வைத்திய நிபுணர்களுககும ஒரு நவீன மருத்துவமனையை நிறுவி மாணவர்களுக்கு மேலே குறிப்பிட்ட சகல வசதிகளையும தாமதிககாது செய்து கொடுப்பதே.**

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும், திணைக்கள ஆலோசகர்களுக்குமென, சகல நவீன வசதிகளும் அடங்கிய புதிய போதனா வைத்தியசாலை ஒன்று நிறுவப்படவேண்டும்.

பல்கலைக்கழக ஆசிரியர்களையும் திணைக்கள (சுகாதார) உத்தியோகஸ்தர்களையும் பகுத்தல் என்பது மாணவர்களின் மீதோ, முதுமாணிப் பட்டதாரி மருத்துவர்களின் மீதோ, கொண்ட அக்கறையினால் அல்ல. இவர்களுள் மிக முக்கியமாக மாணவர்கள் மீதும் நோயாளிகள் மீதும் கொண்ட கூடிய அக்கறையினாலுமல்ல.

ஒரு சிறிதான போதனா வைத்தியசாலை வேண்டுமென்று பல்கலைக்கழக உத்தியோகஸ்தர்கள் வற்புறுத்துவார்களேயானால் நவீன முறையில் செயல்படக்கூடிய ஒரு புதிய வைத்தியசாலை வழங்கப்படல் வேண்டுமென்பதே அதன் அர்த்தமாகும்.

அது திணைக்கள உத்தியோகஸ்தர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கும், முதுமாணிப்பட்டதாரிகளுக்குப் பயிற்றுவிப்பதற்கும், நோயாளிகளைத் தகுந்த முறையில் பராமரிப்பதற்குமான நவீன முறையில் செயல்படக்கூடிய ஒரு புதிய வைத்தியசாலை வழங்கப்படல் வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும்.

ஏனெனில் மிகக் கூடிய தொகை நோயாளிகள் இந்த வைத்தியசாலையையே நாடுவார்கள். அத்துடன் பெரும் பகுதி மாணவர்களின் போதனையும், முதுமாணிப் பட்டதாரி மருத்துவர்களின் பயிற்சிகளும் சுகாதாரத் திணைக்கள ஆலோசகர்களினால் இந்த வைத்தியசாலையிலேயே நடைபெறும் என்ற காரணத்தினால் ஆகும்.

நோயாளர் கவனிப்பு, மாணவர் கல்வியும் ஆக்கநலமும். ஆகிய இரண்டும் கற்பித்தல் (போதனா) மருத்துவமனையில் முன்னுரிமை பெறும் பணிகளாகும்.

மருத்துவப் பட்டம் பெறுவதற்கான கல்வியில் ஈடுபட்டிருக்கும் முன், பட்ட மாணவர்கள் மருத்துவம் செய்வதற்காக மட்டும் ஆயத்தம் செய்யப்படுவதில்லை. அவர்கள் சமூகத்தில் முழு நிறை ஆண்களாகவும் பெண்களாகவும் வாழ்ந்து குடிமக்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதோடு சமூகத்தின் தலைவர்களாகவும் விளங்கக் கூடிய முறையில் வழிகாட்டப்படவேண்டும்.

நோயாளர் கவனிப்பும் கற்பித்தலும் பல்கலைக் கழக மருத்துவ ஆசிரியர்களாலும் (Clinical Teachers). மருத்துவ நிலையங்களிலுள்ள சுகாதாரத் திணைக்கள மருத்துவ நிபுணர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விருவகையினரும் ஒரே மருத்துவ நிலையத்தில் பணி புரிந்து தொடர்புடைய பொருள்களைப் பற்றிப் பொதுவான சந்திப்புகளில் தமக்குட் கலந்துரையாடி, தமது அனுபவங்களைப் பகிர்ந்து, சிக்கலான விடயங்கள் தொடர்பாகத் தமது ஆலோசனைகளையும் கருத்துரைகளையும் ஒருவருக்கொருவர் வழங்க வேண்டும். இவ்விருவகையினரும் ஒரே மருத்துவ நிலையத்தில் உடனுறைந்தாம் கற்பித்தலுக்கும் தேர்வுக்கும் கூட அது வாய்ப்பாக அமையும். இலட்சிய ரீதியிலான (Ideal) இந்நிலை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உள்ளது. ஐக்கிய இராச்சியத்திலும் (U K) இவ் வகைக் கற்பித்தல் வைத்தியசாலைகளே உள்ளன.

இவ்விலக்கை அடையச் சிறந்த திட்டமிடல் இன்றியமையாத முன் நிபந்தனையாகும். மருத்துவ பீடத்திற்கான நிலையத் தேர்வை மேற்கொள்ளும்போது அது வைத்தியசாலையொன்றிற்கு அருகே அமைந்திருக்கக் கூடியதாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அல்

மெடிக்கோ

லது மருததுவ பீடத்துக்கருகே மருத்துவ நிலையம் அமைப்பதற்கான இடமும் கிடைக்கக் கூடியதாக இருக்கவேண்டும். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடம் மருத்துவ நிலையத்திலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் முதல் அணி, 1980 ஆம் ஆண்டில் மருத்துவமனைப் பயிற்சியைத் தொடங்கிற்று. மருத்துவ பீட மாணவர்களின் நூலகம், பொது அறை மருத்துவப் பேராசிரியர்களின் அலுவலகம், மாணவர் இளைப்பாறும் அறை, சிற்றுண்டிச் சாலை முதலியவற்றை அமைப்பதற்காக யாழ்ப்பாண மருத்துவ நிலையத்திற்கு எதிரில் மருத்துவ நிலைய வீதியில் அமைந்திருந்த சுகாதார சேவைகள் அத்தியட்சகரின் அலுவலகம் அமைந்திருந்த கட்டிடத்தைப் பொறுப்பேற்பதென,1980இல் முன்மொழிவு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

சிலர் இதன் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். திட்டம் கைவிடப்பட்டது. அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் மருத்துவ நிலையத்துக்கருகே இந் நோக்கத்தை நிறைவேற்ற ஒரு வசதியான இடம் கிடைத்திருக்கும். பின்னர் மருத்துவ நிலையத்துக்கு எதிரே இதற்காக கட்டிடத்தை அமைக்க நிலம் வாங்கப்பட்டது. ஆனால் கட்டிடம் அமைக்கப்படவில்லை. வைத்திய சாலைக்கு அண்மையில் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்திருக்கலாம். அதுவும் செய்யப்படவில்லை.

யாழ். மருத்துவ நிலையம் இன்று அமைந்துள்ள இடத்தில் நவீன முறையில் வசதியான பலமாடிக் கட்டிடங்களை அமைத்து அதில் கற்பித்தல், மருத்துவ நிலையத்தை நிறுவும் திட்டமொன்று நான்கு வைத்திய நிபுணர்களால் முன்வைக்கப்பட்டது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இவ்விடயம் தொடர்பாக ஒருமித்த கருத்து இங்கு ஏற்பட்டது. சுகாதார அத்தியட்சகராலும், சுகாதார அமைச்சராலும் இத்திட்டம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது தொழில் நுட்பக் காரணங்களுக்காக இத்திட்டம் கொழும்பில். பின்னர் நிராகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மருத்துவ நிலையத்தை மேம்படுத்துவதற்கான முழுமையான—தொலை நோக்குடைய திட்டமொன்று இதுவரை வரையப்படவில்லை. இதற்குப் பதிலாக அவ்வப்போது கிடைத்த நிதியைக்கொண்டு. வெற்றிடங்களில் எழுந்தமானத்துக்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. மிகப் பெரிய கட்டிடமொன்றை விரிவான திட்டங்களோடு அமைக்கக் கூடியகாணியின்ஒரு பகுதியில், ஐந்து மாடிக் கட்டிடம் உருவாகி வருகிறது. முழு நிறைவான திட்டத்தை வரைந்து அதற்குப் பொருந்தும்படி கட்டிடங்களை அமைக்குமாறு சில ஆலோசகர்கள் விடுத்த வேண்டுகோள், நிர்வாகிகளைப் பொறுத்தவரையில் செவிடன் காதில் ஊதிய சங்காகப் பயனின்றி முடிந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவருக்கான மருத்துவ நிலையப் பயிற்சி, யாழ்.மருத்துவ நிலையத்தில் நடைபெறுகின்றது. விரிவுரைகள். செய்முறைப் பரிசோதனைகள், நூலக வசதி என்பன இரண்டு மைல்களுக்கு அப்பால் கொக்குவிலிலுள்ள மருத்துவபீடக் கட்டிடங்களில் நடைபெறுகின்றன. காலை வேளைகளில் மருத்துவமனையில் அவர்கள் நோயாளரைப் பார்வையிடும் பயிற்சி பெறுகின்றனர். அங்கு அவர்கள் பல புதிய விடயங்களைப் பயில்கின்றனர் அவைபற்றிய நூல்களை வாசிக்க வேண்டிய தேவை ஏற்படும். பயிற்சி நிகழுமிடத்தில் நூல் நிலைய வசதி இல்லாததால் அவர்கள் உசாத்துணை நூல்களை வாசிப்பதை வேறொரு நேரத்துக்கு அல்லது நாளுக்கு, ஒத்திவைக்க நேரும். ஒரு பிரச்சினையை எதிர் கொள்ளும் போது அதுபற்றி வாசித்து விளங்கிக் கொள்ளக் குறைந்த முயற்சி போதும். ஆனால்,அதனைப் பின்னர்பார்ப்போம் என ஒத்திவைத்தால், அவ்விடயத்தில் அக்கறையும் ஆர்வமும் குறைந்து அதனை அவர்கள் மறந்தே போய்விடலாம். பிற்பகலில் மருத்துவ பீடத்தில் விரிவுரைகளும் செய்முறைகளும் முடிந்தபின், இரண்டு மைல் பயணம் செய்து நோயாளிகளைப் பார்வையிட்டு ஒரு விடயத்தைப் பயில மருத்துவ மனைக்கு வருவது, அரிதாகவேயிருக்கும். கொழும்பில் உள்ளது போல மருத்துவ நிலையம் மருத்துவ பீடத்துக்கு அயலில் அமைந்தால், பிற்பகல் வேளைகளில் கிடைக்கும் ஒய்வு நேரத்தை, அவர்கள் மருத்துவ மனையில் பயனுள்ள முறையிற் கழிக்கலாம். கொழும்பு மருத்துவ பீடத்தின் ஒட்டுண்ணியியல் துறையும் (Parasitology) நுண்ணுயிரியல் துறையும் (Microbiology) பீடத்திலிருந்து அரை மைலுக்கு அப்பால் பொறளையில் அமைந்திருந்தன. பின்னர் அவை பல்கலைக்கழக வளவுக்கே மாற்றப்பட்டன என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

கற்பித்தல், மருத்துவ மனையை எங்கு அமைப்பது? எவ்வாறு மேம்படுத்துவது? என்பன தொடர்பாக, கல்வி கற்க விவேகம்மிக்க மேலவர் குழத்தையும் உள்ளடக்கிய தமிழ் பேசும் மக்கள் ஒரு முடிவுக்கு வராதது இரங்கத்தக்கது. மாணவர் நலனைவிடச் சுய நலம் ஆதிக்கம் செய்வது இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றுவென்று எண்ண வேண்டிருககின்றது.

அடுத்த பத்து ஆண்டுகளிலாவது இந்த அவல நிலையை மாற்ற மருத்துவக் கல்வி முழுமை பெறத் தமிழ்பேசும் மக்கள், பல்கலைக்கழக நிர்வாகிகள், மருத்துவ நிலைய அதிகாரி

( 5-ம் பக்கம் பார்க்க)

# செய்தி மஞ்சரி

## விபத்தில் பாடகர் காயம்

பண்டாரவளையில் நடைபெறவிருந்த புத்தாண்டு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்ற பிரபல சிங்களப் பாடகர் எட்வர்ட் ஜயக்கொடியும், பாடகி சரிதா பிரியதர்ஷினியும் போகும் வழியில் வாகன விபத்தொன்றில் சிக்கி, காயத்துக்குள்ளாகி அவிசாவளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்

## சம்பளம் மட்டுமா நோக்கம்?

''எமது கடமைகளை சம்பளத்தை மாத்திரம் எதிர்பார்த்துச் செய்யாமல் கடமை உணர்வுடன் சமூகநலன் கருதிச் செய்ய வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டப் பொது நூல் நிலைய நூலகங்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. கே. நடராசா கூறினர்.

## பிரதமர் டில்லி செல்கிறார்

பிரதம மந்திரி திரு. டி பி விஜயதுங்க புதுடில்லியில் மேமாதம் 2ம் திகதி நடைபெறவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் 23 வது வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு புதுடில்லி செல்லவுள்ளார். அவருடன் சிரேஷ்ட அதிகாரிகள் குழுஒன்றும் செல்கின்றது.

## இளவரசி இலங்கை வந்தார்

இலங்கையின் உல்லாசப் பயணக் கவர்ச்சி பற்றி அறிந்து கொள்வதற்கென்று யூகோஸ்லேவிய இளவரசி இலங்கை வந்துள்ளார் இவர் இலங்கையின் மிகப் பிரபலமான சட்ட அறிஞர்களில் ஒருவரான டெஸ்மண்ட் டி சில்வாவின் மனைவியாவார்.

## ஈரானில் இலங்கைத் தூதரகம்

கொழும்பில் இயங்கும் ஈரான் தூதராலயத்தின் அந்தஸ்து உயர்த்தப்படும் அதேசமயத்தில் ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் இலங்கைத் தூதரகம் ஒன்று புதிதாகத் திறக்கப்படவுள்ளது புதிய தூதரகத் திறப்பு விழா நடவடிக்கைகள் அடுத்த மாதத்தில் மேற்கொள்ளப்படுமெனத் தெரிய வருகிறது.

## 'பாரபட்சம் தகாது'

மக்கள் வங்கியில் பணியாற்றும் 228 பேருக்கு அதிகாரிகள் தரம் மூன்றில் பதவியுயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனல் இவற்றில் ஐந்துதமிழர்களுக்கும், ஒரு முஸ்லிமுக்கும் மாத்திரமே பதவியுயர்வு வழங்கப்பட்டிருக்கிறது எனவே தகுதிஅடிப்படையில் பதவியுயர்வுகளை வழங்க வேண்டுமென அம்பாறை மாவட்டக் கிழக்குக் கரையோரப் பிரதேச விவசாயிகள் சம்மேளனத்தின் செயலாளர் ஈஸ்டன் இப்ராகிம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கூறியுள்ளார்.

## சாயிபாபாவின் தரிசனம் பெறுவார்

சாயிபாபாவைச் சந்திப்பதற்கென முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன பெங்களூர் சென்றுள்ளார் சுமார் ஒரு வார காலம் இவர் பெங்களூரில் தங்கியிருந்து புட்டபர்த்தி சென்று சாயிபாபாவின் தரிசனம் பெறவுள்ளார்.

## மேஜர் கொலை; கோப்ரல் கைது

அரலங்விலவில் மாதுறு ஓயா பயிற்சிநிலைய இராணுவ மேஜர் ஒருவர் அதேநிலைய லான்ஸ் கோப்ரல் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார் சந்தேக நபர் கைதாகி விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். புத்தாண்டு தினத்தன்று இக்கொலை நிகழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப் படுகிறது.

## 5000 கலன் டீசல் நாசம்

சுமார் இரண்டு இலட்சத்திற்கு மேல் பெறுமதியானது என மதிக்கப்படும் நலாயிரத்துத் தொள்ளாயிரம் கலன் டீசல், தெமட்டக்கொடையில் உள்ள ரயில்வே எரிபொருள் பாய்ச்சும் நிலையத்தில் ஒழுகியுள்ளது இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு.விஜயபால மெண்டிஸ் பொலிசாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். அங்குள்ள எரிபொருள் பாய்ச்சும் நிலையத்தில் 10 ஆயிரம் கலன் கொள்ளக்கூடிய தாங்கி ஒன்றிலிருந்து ரயில் என்ஜின்களுக்கு டீசல் பாய்ச்சுவதற்காக குறிக்கப்பட்ட குழாய்களில் ஒழுக்கு ஏற்பட்டிருக்கின்றன என பொலிஸாரின் அறிக்கை தெரிவித்துள்ளது. நாசகார வேலைகள் காரணமாக இந்த சதி வேலை நடந்திருக்கலாம் என சந்தேகத்தின் பேரில் அங்கிருந்த மூன்று காவலாளிகளையும், எரிபொருள் நிரப்பும் ஒருவரையும் வேலையிலிருந்து இடைநிறுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள.

## பரீட்சைத் திகதி மாற்றம்

யாழ். கல்கலைக்கழகத்தில் 19. 4. 90 இல் நடைபெறவிருந்த கலை, வர்த்தக, தொழில், நிர்வாகப் பரீட்சைகள் 20.4.90க்கும். 19 4 90 இல் நடைபெறவிருந்த இரண்டாம் வருட விஞ்ஞான பீடப் பரீட்சை 5 5 90 க்கும் பிற்போடப்பட்டுள்ளது. இதேவேளை 30 4 90 இல் நடைபெறவிருந்த இராமநாதன் நுண்கலைக் கல்லூரிப் பரீட்சை 14. 5. 90 க்கும் பிற்போடப் பட்டுள்ளது.

---

வவுனியா புலிகள் பொறுப்பாளர் எச்சரிக்கை:

# எல்லைக் கிராமங்களில் சமூக விரோதச் செயல்கள் கூடாது

எல்லைப்புறக் கிராமங்களில் வாழும் சிங்களக் கிராமத்தவர்களுக்கோ அல்லது சிங்கள மக்களுக்கோ நாம் எதிரானவர்கள் அல்லர். ஆனல் எல்லைப் புறத் தமிழ்க்கிராமங்களில் இருந்து அடிக்கடி அப் பகுதிகளுக்குச் சென்று தீய சக்திகளுடன் இணைந்து கசிப்பு கொண்டு வந்து விற்றல், கொள்ளைகளில் ஈடுபடுதல், மாடுகளைக் கடத்திச் சென்று விற்றல் போன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்கமாட்டோம்

இவ்வாறு சோமரசங்குளம் பாடசாலையில் அன்னைபூபதி நினைவாக நடைபெற்ற அடையாள உண்ணாவிரத நிகழ்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. தினேஷ் கூறினர். (11)

## பதவி உயர்வு

மன்னார் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் டொமினிக் தேவதாசன் துரம் பதவி நிலை உதவியாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். (17)

## உங்களுடையதா?

கச்சாய் கொடிகாமத்தைச் சேர்ந்த குணரத்தினம் பாஸ்கரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆசிரிய பீடத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## கலட்டி-பராசக்தி அம்மன் உற்சவம்

தெல்லிப்பளையைச் சார்ந்த மாவை-கலட்டி ஸ்ரீ பராசக்தி அம்மன் ஆலய ஆண்டு உற்சவம் 30 ஆந் திகதி திங்கட் கிழமை பகல் ஆரம்பமாகும்

வழமைபோலத் தொடர்ந்து வரும் ஒன்பது நாட்களும் இரவு-பகல் சிறப்பு அபிஷேக ஆராதனைகளுடன், மங்கல வாத்தியங்கள் முழங்க, அம்பிகை திருவீதியுலா வருதலும் கோலாகலமாக இடம்பெறும்.

## குரும்பசிட்டியில் அப்பர் குருபூசை

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் இம்மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை பிற்பகல் அப்பர் குருபூசை கொண்டாடவுள்ளனர் சன்மார்க்க சபைத்தலைவர் ''கலாகேசரி'' ஆ.தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், 'வாக்கின் நாயகனர்'' என்னும் பொருளிற் கனகசபாபதி நாகேஸ்வரன் சிறப்புரையாற்றவுள்ளார்.

இவ்விழாவிற் சபையின் சமயப் பணிகளில் முன்னின்றுழைத்த அமரர் நா சிவசாமி ஐயர், அமரர் மு சுப்பிரமணியம் ஆகியோரின் பிரதிமைப் படங்கள் திரைநீக்கஞ் செய்து வைக்கப்படும்.

## ஸ்ரீநாராயண சன சமூக நிலைய 38வது ஆண்டு விழா

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 38வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் புதன் கிழமை. பிற்பகல் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் செ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாகஉள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ் டிவகலாலா, மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம், தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபர் த. சண்முகநாதன், உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளுவர்.

---

விரிவுரையாளர் நாகேஸ்வரன் பேச்சு:

## சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி ஆலயம் புதிய சந்ததிக்கு முன்மாதிரி

'எமது இனத்தின் எதிர்கால சந்ததிக்குக் கொடுக்கும் முன்மாதிரியில் சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு தனித்த ஓர் இடம் உண்டு மக்களின் நம்பிக்கையும் மக்களின் நன் நடத்தையுமே தெய்வம் உண்டு என்பதை அறிவிப்பதாகும்.''

இவ்வாறு சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பங்குனித்திங்கள் உற்சவ விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் பேசுகையில் குறிப்பிட்டார்

சிறப்புச் சொற்பொழிவாற்றிய கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு இம் மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் ஐ கோ. சந்திரசேகரம் பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவித்தார்.

அன்றைய தினம் ஆலயத்தில் விசேட ஆராதனைகளும் மேளக்கச்சேரிகளும் இடம் பெற்றன.

## முன்மாதிரி நடவடிக்கை

யாழ். றோட்டறுக்ட் கழகத்தினர் யாழ் ஈச்ச மோட்டை பகுதி வீடுகளுக்கு சென்று மாமரங்களுக்கான பூச்சி கொல்லி பங்கசு கொல்லியாகிய வற்றை விசிறினர். பல மக்களின் வேண்டுகோளின் படி இது நடைபெற்றது. அத்துடன் இச்சேவை மேலும் பல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்என்றும் யாழ் றோட்டறுக்ட் கழகத்தினர் அறிவித்தனர். (25)

---

## ஆற்றலாளர் அரங்கு



நல்லூரைச் சேர்ந்த வனஜாராணி கண்ணுத்துரை உற்சாகம் நிறைந்த யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி. ஆற்றலாளர் அறிமுகத்திற்காக இவரைச் சந்தித்தபோது இவரிடம் பல திறமைகள் மறைந்திருக்கின்றது என்பதை அறிந்து கொண்டோம். கருத்துத்தெரிவித்தவிதம் பாராட்டுதற்குரியது.

'என் பெற்றோர்களும், அசிரியர்களும் என் கல்விக்கு அதிக உற்சாகமும், உதவியும் அளித்தனர். நானும் முழு முயற்சியுடன் சுயமாக படித்து வந்தேன். இவை தான் என் வெற்றிக்குக் காரணம், 4 ஏ எடுத்ததை நான் சாதனையாக கருதவில்லை. காரணம் ஒழுங்காக பாடசாலை சென்று, படித்து வரும் எந்த மாணவர்களுக்கும் கிடைக்கக் கூடிய வெற்றிதான் இது. அதோடு பாடசாலையில் கல்வி சம்பந்தமான யாவற்றையும் அக்கறையுடன் கற்று வந்தேன். வெறும் புத்தகப் பூச்சியாக, அறிவோடு இருந்துவிடாமல் உலக அறிவினையும் பெறும் விதத்தில் நான் படித்து வந்தேன் அதோடு சாதாரணமாக எல்லோரும். செய்வது போல் படம், ரீ வீ பார்த்தல் கோவில், நண்பிகள் வீட்டிற்கு போவது இப்படி எல்லாம் கூட அனுபவித்தேன். அவையால் எவ்வித பாதிப்பும் படிப்பில் ஏற்படவில்லை. வீட்டு வேலைகளையும், கடமைகளையும் ஒழுங்காக செய்து கொண்டுதான் என் கல்வியைத் தொடர்ந்தேன். பெண்கள் சிறந்த இருதய சத்திர சிகிச்சை நிபுணராக வரமுடியாது என்ற கருத்து இருந்து வருகிறது நான் இக்கருத்தை எதிர்க்கின்றேன் எதிர் காலத்தில் சிறந்த டாக்டராக வந்து-இருதயசத்திர சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்று சாதனை படைக்க வேண்டும் என்பதே என் இலட்சியமாகும். வடபகுதியைப் பொறுத்தவரை உயிரியல் விஞ்ஞானத்துறையில் பெண்கள் 4 ஏ எடுத்தது இதுவே முதலதடவை (அந்தப் பெருமையில் இவருக்கும் பங்குண்டு) எப்படியும் படித்து இந்த துறையில் சித்தியடைய வேண்டும் என்று முழு மூச்சாக செயற்பட்டேன். எனது கல்லூரி ஆசிரியர்களும் இந்நோக்கிற்காக அதிக ஆதரவும். உற்சாகமும் அளித்தனர் ஒரே இடத்திற்கே சென்று படித்த டியூசன் கல்வியும் எனக்கு பலனைத் தந்தது சமகாலப் பிரச்சினைகள் எனக்கு அதிகம் பாதிப்பைத் தரவில்லை ஆண்கள் பாதிக்கப்பட்டது போல் பெண்கள் அதிகம் பாதிக்கப்படவில்லை எனக்கு விளையாட்டுத் துறையில் மிகுந்த ஆர்வம் உண்டு. விளையாட்டில் ஈடுபட்டால் கல்வி பாதிக்கும் என்பார்கள். ஆனல் என்னைப் பொறுத்தவரை அது உண்மையில்லை. எதையும திட்டமிட்டு செயல்படுத்தினல் தோல்வி என்ற வார்த்தைக்கே இடமில்லை, கல்வியில் வெற்றி பெற வேண்டும் என்ற அதிக முயற்சி தேவை, அது மட்டுமல்ல செய்முறை பரீட்சை வினத்தாள் செய்வது போன்றவற்றிலும் ஈடுபட வேண்டும் என்று கூறிய வனஜராணியை சகல துறைகளிலும் சிறப்புற்றுவாழ முரசொலியும் வாழ்த்தி நிற்கிறது.

# ஒரே வாரம்.... இக்குடும்பத்திற்கு நிகழ்ந்ததோ பெரும்பாரம்; துயர் ஒதுக்குமா ஓர் ஓரம்?



இசை மாறிய பறவைகளாய் யாழ்-புகையிரத நிலையத்தை ரயில் மூலம் வந்து தஞ்சமடைந்த இரு சின்னஞ் சிறுசுகள் பற்றிய விடயங்கள் வேதனைமிக்க அத்தியாயங்களைக்கொண்டுள்ளதென்ற பின்னணி இப்போது தெரிய வருகிறது.

கடந்த பன்னிரண்டாம் திகதி கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ். ரயிலில் அனுதரவாகக்காணப்பட்ட கொழும்பு ஊறுகொடவத்தையைச் சேர்ந்த சந்திரகுமார் (9), ரமேஷ்குமார்(8) ஆகிய இரு சிறுவர்களும் யாழ் ரயில் நிலையத்தில் அபயமடைந்தமை பற்றிய செய்தி பதினைந்தாம் திகதி வெளியான முரசொலி பத்திரிகையில் இடம்பெற்றிருந்தமை முரசொலி வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இச்சம்பவம் தொடர்பான தகவல்கள் நெஞ்சை நெகிழ வைப்பனவாக உள்ளன...... பிரஸ்தாப சிறுவர்கள் இருவரும் தமது நெருங்கிய உறவினரான கார்மேகம் என்ற இளைஞருடன் பரந்தனில் உள்ள உறவினரின் வீட்டுக்கு கொழும்பிலிருந்து வந்தனர்.

வரும் வழியில் மாகோவருக்கு அருகில் ரயில் பாலத்தில் மோதுண்டு கார்மேகம் வெளியே தூக்கி வீசப்பட்டு மரணத்தைத் தழுவினர். கார்மேகத்துக்கு நிகழ்ந்த விபரீதம் பற்றி ஏதுமறியாத பிரஸ்தாப சிறுவர்கள் தொடர்ந்து பயணம் செய்தனர். பரந்தனும் கடந்தது யாழ் நிலையத்தில் இறங்க வேண்டியதாயிற்று.

இவர்களை யாழ். புகையிரத நிலைய அதிகாரிகள் மனிதாபிமான ரீதியில் தமது பொறுப்பிலேற்று, இவர்களது கொழும்பு முகவரிக்கு ஒருவர் மூலம் தகவல் அனுப்பியும் வைத்தனர்.

இக்கட்டத்தில் குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு அம்சம் என்னவெனில் கார்மேக விபத்துக்குள்ளானமை பற்றி சம்பந்தப்பட்ட ரயில் சாரதிக்கோ, பாதுகாவலருக்கோ தெரியாதபடியால் அவரது சடலத்தை பின்னல் வந்த மற்றொரு ரயில் சாரதி கண்டெடுத்து குருநாகல் வைத்தியசாலையில் ஒப்படைத்திருந்தார்.

இதே காலப்பகுதியில் ஊறுகொடவத்தையில் இவர்களது மற்றொரு நெருங்கிய உறவினர் திடீர் மரணமாகியிருந்தார்.

இவரது மரணச் செய்தியை இச்சிறுவர்களின் தந்தை பரந்தனுக்கு கொண்டுவந்த பொழுதான் கார்மேகம் உட்பட இவர்கள் மூவரும் பரந்தன் வந்தடையாத விடயம் தெரிய வந்தது. யாழ் புகையிரதப் பகுதியால் அனுப்பப்பட்டவர் தெரிவித்த தகவலையடுத்து ஊறுகொடவத்தையைச் சேர்ந்தவர்கள் நேற்று யாழ். ரயில் நிலையம் வந்து அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சிறுவர்களை பொறுப்பேற்றனர் யாழ் ரயில் நிலைய அதிகாரிகளின் தகவலாளர் கொழும்பு சென்றவேளையில் தான் கார்மேகம் சடலமாக குருநாகலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள தகவல் பொலிஸார்மூலம் உரியவர்களுக்கு தெரியவந்திருந்தது.

ஏககாலத்தில் ஏற்பட்ட அடுக்கடுக்கான துயரங்களை மனச்சுமைகளாக நெஞ்சிலேற்றிய வண்ணம் இக்குடும்பம் யாழ் ரயில்நிலையத்தில் நேற்று நின்றிருந்த காட்சி இதயத்தின் அடித்தளத்தில் ரணத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.

**பிரத்தியேக செய்தி**

---

## விமர்சன அரங்கு

# பிஞ்சு விரல்களின் கொஞ்சும் லயநாதம்

17. 3. 90 -ல் தெல்லிப்பழை காசிவிநாயகன் இசைக்கலை மன்றத்தில் நிகழ்ந்த செல்வன் சச்சிதானந்தம் சஞ்சயன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் நெஞ்சை நிறைத்துச் சென்ற ஒரு நல்ல நிகழ்ச்சி, நுண்கலை பற்றிய நிகழ்வுகள் தொடர்ந்து ஆயிரக்கணக்கில் வந்து போனாலும் தமிழ் நெஞ்சங்களால் மறக்க முடியாத நிகழ்ச்சி இது காரணம்—

பக்குவமான லயஞானத்தை வெளிப்படுத்திய சஞ்சயனுக்கு வயது பன்னிரண்டு, ஆறுவயதில் கிடப்பா. எட்டு வயதில் புல்லாங்குழல் மாலி, ஒன்பது வயதில் பாலமுரளி, பத்துவயதில் மண்டலின் ஸ்ரீனிவாசன் அரங்கேறி இசை வழங்க—பன்னிரண்டு வயதில் மிருதங்கம் சஞ்சயன் எங்கள் கண்களால் கண்டோம்; செவியாராக் கேட்டோம். மாலை மூன்று மணிநேரம் தொடர்ந்து லயத்தின் நுட்பங்கள் சிறப்பாக வெளிக் கொணரப்பட்டன இளம் கலைஞர் திரு. வர்ண குலசிங்கம் இராமேஸ்வரனின் நின்னுகோரி மோகன வர்ணத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. சாதாரணமாக எல்லோரும் அறிந்த வர்ணம் கையாளப்பட்ட விதம் சிறிது வித்தியாசமானது. ஒவ்வொரு வரியும் (ஆவர்த்தனமும்) திஸ்ரநடையாகப் பாடப்பட்டு உடனேயே சதுஸ்ரகதியுடன் பாடப்பட்டது. லயத்திற்கு அளிக்கப்பட்ட முதன்மை, சஞ்சயன் இதற்கு சற்றும் சளைக்காமல் வாசித்து ஆரம்பத்திலேயே லயத்தில் ஒரே ஸ்திரத்தினைப்பிடித்துக் கொண்டார், குதிரையின் கம்பீரமான பாய்ச்சலும் ஓட்டமும் இவர் கரங்கள் வெளிப்படுத்தின.

ஆரம்பத்தில் ஆசிதந்து தமது சொந்த மிருதங்கத்தையே மாணவனிடம் கொடுத்த திரு, க, ப, சின்னராசா அவர்கள் மாணவர்களின் அருகமர்ந்து அவன் தன் திறமைகள் அனைத்தையும் பிரசவித்துக்கொள்ள உதவும் தாதியாக விளங்கினர்.

பயமறியாத இளங்கன்று இத்தனை பாடங்களையும் நினைவில் நிறுத்தி வாசிப்பது ஒரு பன்னிரண்டு வயது மாணவனுக்கு ஒரு சாதனையே.

தனிய ஆவர்த்தனம் என்பது ஒரு சிறந்த மகுட விண்ணியாசம் பெரிய வித்துவான்கள் கையாளும் கோர்வைகள் அழகாக லய சுத்தமாக வாசித்துப் போற்றப்பட வேண்டியதே. இடங்கள் தள்ளி வரும். பாடங்கள் திஸ்ரநடை, கண்டநடை, மிஸ்ரநடை, சங்கீர்ண நடை சதுஸ்ரநடை எல்லாம் பிரமாதம்.

அடுத்து பைரவி ·ராகம் ஆதிதாளம் கண்டநடையில் திரு. சினனராசா அவர்களே அமைத்த பல்லவி இந்த நிகழ்ச்சிக்குச் சிகரமாக அமைந்தது எனலாம்.

துல்லியமாக சுத்த அனுசரணையுடன் திரிகாலம்படுத்தி லயத்தின் சிறப்பான நெளிவு சுழிவுகளை வெளிப்படுத்திய சஞ்சயனுக்கு—சபை கட்டுப்படுத்த முடியாமல் கொட்டித் தீர்த்தது.

மிருதங்கத்திற்குப் பயன்படுத்தப்படும் தோல்கள் எல்லாம் பதப்படுத்தப்படாதவை (Untanned) என்பது மிகவும் முக்கியமானவிடயம் அதனை வாசித்த சஞ்சயனின் பிஞ்சு விரல்கள் பதப்பட்டு விட்டனவே! நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய சங்கீதக்கல்வி அதிகாரி சு. கணபதிப்பிள்ளை அவர்கள் அச்சிறுவனின் எதிர்காலச் சிறப்பிற்கு வாழ்த்தினர். திரு, ஏ, எஸ். இராமநாதனின் சிஷ்யர்களில் மாணவர்களை உருவாக்கி அரங்கேற்றும் பணியில் இன்று முன்னணியில் விளங்குபவர் திரு. சின்னராசா அவர்களே எனவும் குறிப்பிட்டு பெற்றோரின் நன் முயற்சிக்குப் பாராட்டினர் பெற்றோர் எல்லாம் சஞ்சயனின் பெற்றோர் ஆனால்.........!

திருமதி. தர்மபூபதி. சிதர்பரநாதன்

---

### சகல நவீன வசதி ...

கள், அரசியல் வாதிகள் முதலிய அனைவரும் ஒன்றிணைந்து முயல்வார்களென நம்புகிறோம். ஒரு பல்கலைக்கழகத்தில் முக்கியம் பெறுவோர் மாணவரே. அவர்களுக்கு இழைக்கப்படும் எந்தத் தவறும் அவர்களுக்கு ஏற்படும் எந்தப் பற்றுக்குறையும் சமூகம்முழுவதையுமே பாதிக்கும். எனவே, அனைத்து வசதிகளையும் கொண்ட முழுமையான மருத்துவ பீடத்தை நிறுவி, நாட்டின் சுகாதார மேம்பாட்டிற்கு உழைக்கும் பயனுள்ள மருத்துவர்களை நாம் உருவாக்க வேண்டும் இவ்விலக்கை அடைவதற்கு ஒரே ஒருவழிமருத்துவ பீடத் திற்கு அருகாமையில் பேராசிரியர்களுக்கும், சுகாதாரத்துறைவைத்திய நிபுணர்களுக்கும், ஒரு நவீன மருத்துவமனையை நிறுவி, மாணவர்களுக்கு மேலேகுறிப்பிட்ட சகல வசதிகளையும் தாமதிக்காது செய்து கொடுப்பதே.

மாகாண சபைகளுக்கு நிர்வாகம் முழுமையாக வழங்கப்பட்டதும், குடா நாட்டுக்கு வெளியே, கொழும்பில் உள்ளதைப் போல் ஓர் சிறந்த பூரணத்துவம் வாய்ந்த மருத்துவ பீடமும் போதனா வைத்திய சாலையும் அமைப்பது பற்றி கவனத்துக்கு எடுத்துக்கொள்வோமாக.

---

# வன்னிச் செய்திகள்

## வவுனியா நலனபுரிச் சங்கம்

வவுனியா அரசினர் வைத்தியசாலையின் நலன்புரிச்சங்க செயலாளராக வவுனியா மாவட்ட வர்த்தக சங்கச் செயலாளர் திரு. ரி. கே. இராசலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது தலைவர்: திரு சி. மார்க்கண்டேயர் (லயன்ஸ்) உப தலைவர்: டாக்டர் இராசதுரை தனாதிகாரி: ஜனாப் எம் அஸ்ரப் (வர்த்தகர்) ஏனைய நிர்வாகக்குழு உறுப்பினர்கள்: டாக்டர் எஸ் கே. பாலசிங்கம், திரு. என். சண்முகராசா, திரு சி. பத்மநாதன் (சமாதான நீதிபதி) (11)

## பாடசாலை பெயர் மாற்றம்

வவுனியா-மதியாமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தற்போது விவேகானந்த ' வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டிருப்பதாகப் பாடசாலை அதிபர் திரு ஏ. சிறிகரன் அறிவித்துள்ளார். இவரது முயற்சியின் காரணமாக இப்பாடசாலையின் தரமும் உயர்த்தப் பட்டுள்ளது முன்பு 5-ம் ஆண்டு வரை மட்டுமே வகுப்புக்கள் இருந்தது. தற்போது 9-ம் ஆண்டு வரை வகுப்புக்கள் வைக்க பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். நவரட்ணராஜா அனுமதி வழங்கியுள்ளார் என விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (11)

## தேநீர் விருந்துபசாரம்

சமீபத்தில் நடைபெற்று முடிந்த க. பொ த. சாதாரணப் பரீட்சையின் போது வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றிய இணைப்பு உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு உத்தியோகத்தர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு தேநீர் விருந்து வைபவம் ஒன்று நடாத்தப் பட்டது. இவ்வைபவத்தில் பேசிய வவுனியா பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நவரெட்ணராஜா தனது உரையில் :- வவுனியாவில் ஒரு விடைத்தாள் திருத்தும் நிலையம் உருவாக்குவதற்கு முயற்சிகளை எடுப்பேன் என்றும், மேலும் இப்படியான வைபவங்கள் வைப்பதன் மூலம் நடைபெறற பரீட்சைகளில் ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும். பரீட்சை திறம்பட நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் தனது நன்றியினை தெரிவிப்பதாகவும் தெரிவித்தார். (11)

## அன்னை நினைவாக பட்டிமன்றம்

அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு வவுனியா சிற்றூரவையினரின் ஏற்பாட்டில் நாளை 19-ம் திகதிநடைபெறவுள்ள எழுச்சித் தினத்தன்று எழுச்சிஊர்வலம், பேச்சு, கவிதைப்போட்டிகள், விளையாட்டுப்போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் என்பன நடைபெறவுள்ளன விசேட அம்சமாக ''மகாத்மாகாந்தியா? அன்னைபூபதியா தியாகத்திற் சிறந்தவர்?'' என்ற தலைப்பிலான பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது. இதேவேளை இன்று நடைபெறவிருக்கும் எழுச்சிவிழாவிற்காகவவுனியா நகரசபை மைதானம் ஒழுங்குபடுத்தப்படுகின்றது கடந்த ஏழுவருடங்களாக இராணுவநடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்டுவந்த இம்மைதானத்தில் வளர்ந்துள்ளபுல் முதலியவற்றை வெட்டிச் சுத்தம் செய்வதில் நகரசபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

## வீதி அகல மாகிறது

யாழ் கண்டிவீதி ஒரு வழிப்பாதையாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரை விசாலமாக்கப்பட்டு வருகின்றது கனரக இயந்திரங்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

## மின்சாரம் தாக்கி விவசாயி பலி

யானைகளைக் கொல்வதற்கு வைத்த மின்சாரம் தோட்ட உரிமையாளரின் உயிரைப் பறித்த சம்பவம் ஒன்று வவுனியா பம்பைமடு கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. தோட்ட உரிமையாளரான தர்மலிங்கம் பாலச்சந்திரன் (25 வயது) தோட்ட வரம்பில் நடந்து வரும்போது கால்தவறி விழுந்தபோது, மின்சாரக் கம்பிகளைப் பிடித்ததால் ஸ்தலத்திலே துடித்து மரணமானர். இவரைக் காப்பாற்ற முனைந்து இவரைப் பிடித்த இவரது மனைவியும் மின் தாக்குதலுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## உபாலி சில்வா பரந்தன் வருகிறர்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படவிருக்கும் திருத்த வேலைகளை நேரடியாக கண்காணிப்பதற்கு கூட்டுத்தாபனத் தலைவர் உபாலி டி சில்வா இம் மாதம் பத்தொன்பதாம் திகதி பரந்தன் தொழிற்சாலைக்கு வருகை தரவுள்ளார். 21ஆம் திகதி இடம்பெறவுள்ள புத்தாண்டு விழாவிலும் அவர் கலந்துகொள்வார்.

## டாக்டர்கள் பற்றுக்குறை

மன்னர் ஆதார வைத்தியசாலையில் டாக்டர்கள் பற்றுக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது மாவட்ட வைத்திய அதிகாரியைத் தவிர்த்து, எட்டு டாக்டர்கள் இங்கு கடமை புரிய வேண்டும், ஆனல் தற்போது மூன்று டாக்டர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர், இதனல் நோயாளர்கள் பாதிக்கப்படுகிறர்கள், சில வேளைகளில் மாவட்ட வைத்திய அதிகாரி தமது கடமையைச் செய்ய முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது,

# இவ்வருட ஆடிவேல் விழாவில்

# தமிழக கலைஞரின் வில்லுப்பாட்டு

## - ராஜாங்க மந்திரி தேவராஜ் தகவல்:

"இவ்வருட ஆடிவேல் விழாவுக்குத் தமிழகத்திலிருந்து பிரபல வில்லுப்பாட்டுக்குழு ஒன்றை அழைக்க ஆவன செய்துள்ளோம். வில்லுப்பாட்டின் மூலம் மிக எளிமையான முறையில் சமயக்கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்ப வாய்ப்பு அதிகம் உண்டு."

இவ்வாறு இந்துசமய கலாசார ராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் தெரிவித்தார்.

இம்மாதம் இருபத்துநான்காம் திகதி முதல் முப்பதாம் திகதிவரை, யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள ஆலயங்களையும், இலக்கிய சமய ஸ்தாபனங்களையும் பார்வையிடவுள்ளதாகவும், ஆலய புனருத்தாரண வேலைகளிலும் கவனம் செலுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஜூன் மாதமளவில் மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளதாகவும் அவர் சொன்னார்.

## ஒஸ்மானியாக் கல்லூரியில் மீண்டும் ஆரம்பப் பிரிவு

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் மீண்டும் ஆரம்பப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி தற்போது வழங்கப்பட்டுள்

இக்கல்லூரியில் கடந்த காலங்களில் ஆரம்பப் பிரிவு மூடப்பட்டிருந்தது தெரிந்ததே இப்பிரிவை மீண்டும் திறக்ககோரி ஒஸ்மானியாக் கல்லூரி பெற்றோர், ஆசிரியர் சங்கமும், அபிவிருத்திக் குழுவும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியிடம் முறையிட்டிருந்தனர்.

இக்கோரிக்கையை கல்வித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மீண்டும் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் ஆரம்பப்பிரிவை இயங்க வைத்துள்ளது.

## யாழ். போலிஸ் நிலையங்களுக்கு 150 தமிழ் போலிஸார் தேவை

யாழ்மாவட்டப் பொலிஸ் நிலையங்களுக்கு உடனடியாக 150 தமிழ் பொலிஸார்மேலதிகமாக தேவை எனதெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது 314 தமிழ்ப் பொலிஸாரே யாழ்மாவட்ட பொலிஸ்நிலையங்களில் கடமைபுரிந்துவருகின்றனர்

தற்போது யாழ்மாவட்டதில் ஆறுபொலிஸ்நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு பொலிஸ்நிலையத்திற்கும் நூறு தமிழ்ப்பொலிஸார் வீதம் அறுநூறுபொலிஸார் யாழ்மாவட்டத்திற்குத்தேவை.

மேலும்யாழ்ப்பாண மாவட்டத்தில் பதினொரு பொலிஸ் நிலையங்கள் திறககப்படவேண்டும், இவை திறக்கப்பட்டால் தமிழ் பொலிஸாரின் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## குருநகர் கடையில் இரவில் கொள்ளை

யாழ்ப்பாணம், குருநகரில் 617, பீச் ரோட்டில் அமைந்துள்ள "நியூகோணர்ஷொப்" பிலிருந்து தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று நள்ளிரவு நேரத்தில் ரூபா4000/= பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்பும்,சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர், கடையிலிருந்து 15,000/= பெறுமதியான பலபொருடகள் கொள்ளையடிக்கப்பட்டன.

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

கரணவாய் பகுதியைச் சேர்ந்த கே. தங்கராசா (வயது27) என்ற இளைஞரின்சடலம் மூன்று நாட்களின் பின் பிணமாக கிணற்றிலிருந்து மீட்கப் பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-மேற்படி மரணமான நபர் வீடியோ படம் பார்க்கச் செல்வதாகக் கூறி வெளியே சென்றார். ஆனால் அன்றிரவோ அன்றி அடுதத நாளோ இவர் வீடடிற்கு வராததனால் இவரை தேடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது ஆனால் பயனளிக்கவில்லை. மூன்று நாட்களின் பின் மேற்படி நபரின் பிணம் மீட்கப் பட்டது

## பட்டமேற்றுதல்; வெற்றிபெற்றோர்

அரியாலையின் 71வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் சிறப்புப் போட்டியானபட்டம் ஏற்றும் போட்டியில் சென் பெனடிக்ற் வீதியைச் சேர்ந்த வி. தயாபரசிங்கம் முதலாவது இடத்தையும் வைரவர் கோவில் வீதியைச் சேர்ந்த எம். இராகேந்திரன் 2வது இடத்தையும், கலைமகள் வீதியைச் சேர்ந்த எஸ். கணபதிப்பிள்ளை மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டார்கள். (4)

## தீவுப்பகுதியில் திருட்டு

வேலணை வங்களா வடிச் சந்தியில் உள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனமான அம்பாள் ரேடர்ஸ் நேற்று முன்தினம் உடைக்கப்பட்டு அரிசி மூடைகள் மற்றும் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றின் மொத்தப் பெறுமதிஇருபத் தையாயிரம்ரூபாய் இருககலாமென தெரிவிக்கப்டுகிற்து இதேபோல் அண்மையில் வேலணை வங்களா வடி முருகன் கோவிலிலும் பெறுமதிவாய்ந்த ஒலி பெருக்கி சாதனகள் திருடுப் போனதும் குறிப்பிடத்தக்கது (24)

## தேவார மனனப் போட்டி

நல்லை ஆதீனத்தால் நடத்தப்படும் தேவார மனனப் போட்டி 18-ம்,21-ம்,22-ம் திகதிகளில் காலை 9.மணி முதல் ஆதீன மண்டபத்தில் நடைபெறும் போட்டியாளர்களுக்கான திகதிகள் விண்ணப்பித்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. பரிசளிப்பு 29 ம்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்

## ரயில் இணைப்பு சேவை ஒழுங்கில்லை

யாழ். புகையிரத- பஸ் நிலையத்திற்கான இணைப்பு சேவை ஒழுங்காக நடைபெறுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் வரும் நேரங்களில் பஸ் வருவதில்லை இதனால் பயணிகள் பல தொல்லைகளை அனுபவித்து வருகின்றனர்.

யாழ் ரயில் நிலையத்திர்கும், பஸ் நிலயத்திற்குமிடையேயான தொலைபேசி சேவையும் தற்போது பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

# சுவையான செய்திகள்

## 'பச் சோந்தி' மீனிலும் உண்டு

சூழ்நிலைக்கு ஏற்ற பல்வேறு குணங்களைக் காட்டும் பச்சோந்தி மனிதர்களைப் பாத்திருப்பீர்கள். ஆனால் மீன்களில் பச்சோந்தியைப் பார்த்திருக்கின்றீர்களா? 'பர்ச்' என்ற மீன் கடல் குளங்களில் ஆங்காங்கே உள்ள சூழ்நிலைக்கு ஏற்பத பல விதமான நிறங்களுக்கு ஏற்ப, பல விதமான நிறங்களுக்குத் தன்னை இது மாற்றிக் கொள்கின்றது. பல நிறங்களைக் காட்டும் இந்த மீனைக் கடல் பச்சோந்தி என்றே அழைக்கின்றனர்.

## ஆணாக விரும்பும் பெண்கள்

அடுத்த பிறவியில் ஆணாகப் பிறக்க பல பெண்கள் விரும்புகின்றனர். அப்படிப் பிறக்க வேண்டும் என்பதற்காகப் பிரார்த்தனை செய்வதற்காகவே ஒரு கோவில் சீனாவில் இருக்கின்றது. சீனப் பெண்களுக்கு மறு பிறவியில் நம்பிக்கை உண்டு. ஆணாகப் பிறந்தால் சுதந்திரங்களை அனுபவிக்கலாமாம். நடக்கட்டும்!

## ஆர்மியாவில் அதிசய அருவி

ஆர்மியா அருகே ஒரு அருவி இருக்கின்றது. குளிர் காலத்தில், இந்த அருவியில் வெந்நீரும் வேனிற் காலத்தில் ஐஸ் போன்ற குளிர்ந்த நீரும் விழும். மற்ற நாட்களில் இயல்பான தண்ணீராக இருககின்றது... இது அதிசயமான ஒரு அருவி!

# முரசொலிக்கு வந்த கடிதம்

## நெடுந்தீவு பிரசவவிடுதி திருத்தவேலை பூர்த்தியாகுமா?

ஆசிரியர்,
முரசொலி,

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் பிரசவ அறை திருத்த வேலைக்காக பிரசவவிடுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் திருத்த வேலைகள் அரைகுறை வேலையாக நின்றுவிட்டது பிரசவ அறையாக பிரசவ விடுதியையே பாவித்துவருகின்றனர் இதனால் பிரசவத்திற்காக செல்வோரும் அவர்களை பார்வையிடுவோரும் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றார்கள். திருத்த வேலை ஒப்பந்தகாரர்கள் எம் தீவநலனில் அக்கறை கொண்டு திருத்தவேலையை செய்து முடிப்பார்களா? இங்கிருந்து நோயாளி ஒருவரை வெளியூர் கொண்டு செல்வதும், பெரிதும் கஷ்ரமான ஒன்றாகும். மேற்படி பிரசவ அறையின் திருத்த வேலைகள் உடனடியாக செய்து முடிக்க சுகாதாரத்திணைக்களத்தையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் வேலையை செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம். பிரசவ விடுதியில் வெளவால்களின் தொல்லை அதிகம். அவற்றின் எச்சம் பலகாலமாக துர்நாற்றம் வீசிக்கொண்டு இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திரு. சு. கணேசலிங்கம்
செயலாளர்

சனசமூகநிலையங்களின் சமாசம்,

## தொண்டர் ஆசிரியர் நியமனம் விரைவில் வழங்கப்படுமா?

ஆசிரியர்,
முரசொலி

மேற்படி 25000 ஆசிரிய பயிலுநர் நியமனத்தில் தொண்டர் ஆசிரியர்களும் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர். இதற்காக 22. 02. 1990 வர்த்தமானியில் விண்ணப்பம் கோரப்பட்டது. முடிவுத் திகதியும் முடிந்துவிட்டது. இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை. இந்த ஏப்பிரல் மாத முடிவிற்குள் நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடனும், பணிவன்புடனும் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

வவுனியா — தொண்டர் ஆசிரியர் சங்கம்

## ஹஜ் யாத்திரை செல்வோர் தடுப்பூசி போட வேண்டும்

ஹஜ்யாத்திரை மேற்கொள்வோர் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்பே கொலரா, மூளைக்காய்ச்சல் ஆகிய நோய்கள் சம்பந்தப்பட்ட தடுப்பு ஊசிகளை அவசியம் ஏற்றிக்கொள்ள வேண்டுமென சவூதி அரேபியா அறிவித்துளளது.

மூளைக்காய்ச்சல் தடுக்கும் மருந்தை ஏற்றிக்கொள்வதன் அவசியம் இம்முறையே தீவிரமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

இம்முறை இலங்கையிலிருந்து சுமார் 3500 முஸ்லிம்கள் ஹஜ் யாத்திரை மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வடமராட்சிகிழக்கு உண்ணாவிரதம்

அன்னை பூபதிகணபதிப்பிள்ளை அவர்களின் நினைவையொட்டி வடமராட்சி கிழக்குப்பகுதியில் பரவலாக உண்ணாவிரதங்கள் மேற்கொள்ளப்படடு வருகின்றன. மருதங்கேணி உடுத்துறை ஆகிய பகுதிகளில் உண்ணாவிரதங்கள் மேற் கொள்ளப் பட்டன. (43)

## தீப்பற்றும் பஸ் வண்டி

யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, பன்னாலை ஊடாகக் கீரிமலையை அடையும்795இலக்க இ. போ. ச. பஸ்வண்டி இயந்திரக்கோளாறு காரணமாக அடிக்கடி தீப்பற்றுகின்றது.

இப்பாதையில் ஒரு பஸ்வண்டியே ஓடுகிறது. அதுவும் இவ்வாறு அடிக்கடி தீப்பற்றுவதால் நடுத்தெருவில் நின்றுவிடுகிறது. இதனால் அதிகாலையில் சந்தைக்குச் செல்லும் மக்கள் நடுத்தெருவில் நின்று அவதிப்படுகின்றனர். வேலைகளுக்குச் செல்லும் தொழிலாளர்களும் இவ்விடருககுள்ளாகுகின்றனர். இந்நிலை உடனடியாகக் கவனிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால் மக்கள் தடையின்றிப் பிரயாணம் செய்ய ஏதுவாகும். (25)

## நயினை கலாமன்ற கவிதைப் போட்டி முடிவுகள்

நயினாதீவு மணிபல்லவ கலாமன்றம் தனது 28வது ஆண்டு விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் 'தூரத்துப்பச்சை' என்ற தலைப்பில் நடாத்திய கவிதைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலாம் இடம் திரு. இரா நெடுஞ்செழியன் இரண்டாம் இடம், திரு. க. கமாட்சிசுந்தரம் மூன்றாம் இடம், கவிஞர் வெ. ஐயாத்துரை நான்காம் இடம், திரு. சி. பரராசசிங்கம் ஐந்தாம் இடம். திரு சுப்பிரமணியம் அண்ணாத்துரை.

இப்போட்டியில் நடுவர்களாக, கவிஞர் இ. முருகையன். கவிஞர் க. சொக்கலிங்கம், கவிஞர் காரை செ சுந்தரம்பிள்ளை ஆகியோர்கடமையாற்றினர்.

## லிதுவேனிய விவகாரம்:

# அமெரிக்கா தலையிடின் யுத்தம் மூளும்; ரஷ்யா எச்சரிக்கை

லிதுவேனிய விவகாரத்தில் சோவியத்யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான கருத்து வேறுபாடு வலுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லிதுவேனியாவின் சுதந்திரம் பற்றிய விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டால் மீண்டும் வல்லரசுகளுக்கிடையே கெடுபிடி யுத்தம் ஏற்படும் என்று சோவியத் யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

லிதுவேனிய தேசிய வாதிகளின் காலடியில் புதிய கிழக்கு-மேற்கு உறவை வீசுவது எகத்தாளமானது என்று கம்யூனிஸ்ட் தினசரி 'பிராவ்தா' கூறியுள்ளது.

அதேசமயம் இரண்டு தினங்களுக்குள் சுதந்திரப் பிரகடனம் தொடர்பான எல்லா சட்டங்களையும் வாபஸ் பெறுவிட்டால் அக்குடியரசின்மீது பொருளாதார முற்றுகையை மேற்கொள்ளப் போவதாக ஜனாதிபதி திரு. கொர்பச்சேவ் எச்சரித்துள்ளார்.

மாஸ்கோ தனது பயமுறுத்தலை எவ்வாறு, எப்போது பயன்படுத்தும் என்பது குறித்துத் தமக்கு விவரம் ஏதும் தெரியவில்லை என்று லிதுவேனிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

லிதுவேனியாவை அடிபணியச் செய்யும் முயற்சியாக முக்கிய பொருள்கள் அனுப்புவதை நிறுத்தப் போவதாக திரு. கொர்பச்சேவ் கூறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரமழான் சிந்தனைகள்

### மரியாதை அளிப்பது அவசியம்

''ஹஜ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுவது! நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு இறந்த யூதவுடலைக் (ஜனஸா) கண்டு எழுந்து நின்றார்கள். அப்பொழுது நாங்களும் எழுந்து நின்றோம். இறைவனின் தூதரே! இது ஒரு யூதப் பெண்ணின் பூதவுடலாயிற்றே என்று சொன்னோம், அதற்கு அவர்கள் ஆம்! நிச்சயமாக மரணம் என்பது ஒரு திடுக்கம், ஆதலால், நீங்கள் எந்த ஒரு பூதவுடலைக் காண்பீர்களானாலும் அதற்காக நீங்கள் எழுந்து நில்லுங்கள்! என்றார்கள்.

''எவருக்கு நான்கு பொருட்கள் கொடுக்கப்படுகின்றதோ அவருக்கு இகபர நலன்கள் கொடுக்கப்பட்டு விட்டன என்று கருதப்படும்.

1) நன்றியுள்ள இதயம்.
2) துதிக்கும் நா.
3) சோதனை நிகழும்போது பொறுமை கொள்ளும் தேகம்.
4) தன்னிலும், தன் பொருளிலும் மோசடி செய்ய விரும்பாத மனைவி''

என நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

## நேபாள பிரதமர் காரைச் சூழ 15,000 மக்கள்

# துரோகி, கொலையாளி என்றெல்லாம் வசைமாரி

அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையே இடம் பெற்ற அரசியல் சீர்திருத்தப் பேச்சுக்களில் முட்டுக்கட்டை ஏற்பட்டதைத் தொடர்ந்து ஆவேசம் கொண்ட நேபாள மக்கள் பிரதமர் லோகேந்திரா பகதூர் சந்த், இதர மந்திரிகளின் கார்களை அடித்து நொறுக்கினர்.

பேச்சில் முட்டுக்கட்டை ஏற்பட்டதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்ததனையடுத்து மக்கள் பிரதமரினதும் மற்றும் மூன்று மந்திரிகளினதும் கார்களைச் சேதப்படுத்தினர்.

இச்சம்பவத்துக்கு முன் பிரதமர் பிரயாணம் செய்த காரை 15,000 மக்கள் கூட்டம் கற்களால் தாக்கியது.

பிரதமர் ராஜினாமாச் செய்ய வேண்டும் எனக்கோரிய அவர்கள் திருடன், துரோகி, கொலையாளிகளைத் தூக்கிலிடுங்கள் என்றெல்லாம் கோஷம் எழுப்பினர். நூற்றுக் கணக்கான கலகத் தடுப்புப் பொலிஸார் அப்போது ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டனர்.

1 கோடியே 70 இலட்சம் மக்களைக் கொண்டது இந்நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜம்மு- காஷ்மீர்

# டாக்டர்கள் கோதிப்பு வேலைநிறுத்த முஸ்தீபு

ஜம்மு — காஷ்மீர் டாக்டர்களும், வைத்தியத்துறைச் சேவகர்களும் வேலை நிறுத்த அறிவிப்பு விடுத்துள்ளனர்.

பத்து நாள் நீடிக்கும் ஊரடங்குச் சட்டத்தை நீக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இந்திய இராணுவப்படைகள் மூலம் அடிப்படை மனித உரிமைகளையும் மீறி மக்கள் மீது இழைத்துவரும் சொல்லொணுச் சித்திரவதைகளைத் தாம் வருத்தத்துடன் கவனித்திருக்கிறோம் என்று டாக்டர்களும் வைத்தியத்துறை சேவகர்களும் கூட்டாக விடுத்த அறிக்கை தெரிவித்தது.

## அவுஸ்திரேலியாவில்

# தஞ்சம் கோரிய தமிழ்இளைஞர் திருப்பி அனுப்பப்பட்டார்.

அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட நிலையில் தமிழ் இளைஞர் ஒருவர் அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப் படவுள்ளார்

அரசியல் பாதிப்புக்கள் காரணமாக கடந்த வருடம் டிசம்பர் 29 ம் திகதி அவுஸ்திரேலியாவை தஞ்சம் அடைந்த 22 வயது தமிழ் இளைஞருக்கே இன் நிலை ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அதிகாரிகளால் தடுத்து வைக்கப் பட்டு அவர் நீதி விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார். அவுஸ்திரேலியாவில் அவர் புகலிடம் கோரிதங்குவதற்கு காட்டிய காரணங்களை நிராகரித்த நீதிமன்றம் அவரைநாடுகடத்தும் உத்தரவை பிறப்பித்துள்ளது.

இவர் மலேசியன் எயர்லைன்ஸ் விமானம் ஒன்றிலே திருப்பி அனுப்பப்படவுள்ளார் என்றும் இதுபற்றி மேலதிக விபரம் எதுவும் வெளியிடப் படவில்லை என்றும், குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 100 கோடி மக்கள் மண்டேலாவின்

# தொலைக்காட்சி உரையை செவிமடுப்பர் என மதிப்பீடு

தன்னைக் கௌரவிப்பதற்காக நடைபெறவுள்ள பிரமாண்டமானரொக்இசைவிழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்ஸன் மண்டேலா தன் மனைவிசகிதம் லண்டன் சென்றுள்ளார்.

லண்டன் வெம்பிளி ஸ்ரேடியத்தில் நடக்கும் இவ்விழாவில் மண்டேலா நிகழ்த்தும் உரை உலகெங்கும் டெலிவிஷனில் காட்டப்படுவதால்சுமார் 100 கோடி மக்கள் அதைக் கண்ணுறுவர் என மதிப்பிடப் படுகிறது

தென்னுபிரிக்காவுக்கு எதிராக பொருளாதாரத் தடையை தீவிரமாக அமுல் நடத்துமாறு அவர் கேட்டுக் கொள்வார் என எதிர்பார்க்கப் படுகின்றது.

27 வருடங்கள் தென்னுபிரிக்காவில் சிறைவாசம் செய்த மண்டேலா விடுதலை செய்யாபட்டதைக் கொண்டாடுமுகமாக இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## நாடகப்போட்டி

நோர்வேயில் ஒஸ்லோ தமிழ் நாதப் நடாத்தியவாஞெலிநாடகப்போட்டியில் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாங்களும் தியாகிகள்தான் நாடகத்திற்கு முதலாம் பரிசுவழங்கப்பட்டுள்ளது. இவர் பல மேடை நாடகங்கள் 150 வாஞெலி நாடகங்கள் எழுதியிருப்பதுடன் முதன் முதலாகக் கெட்டிக்காரர்கள் முதலாம் பிள்ளை என்ற இரண்டு வாஞெலி நாடக நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்.


# "தொழிற் பயிற்சிகள்"

★ COMPUTER PROGRAMMING & DATA PROCESSING IN BASIC LANGUAGE

60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம்.

★ றேடியோ, ரெலிவிஷன் வீடியோ டெக் றிப்பயறிங்

ரெலிவிஷன், றேடியோ, வீடியோ டெக, திருத்தும்முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் : 4 மாதம்

★ ENGINEERING DRAWING

பொறியியல் பீடமாணவர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

★ றீவைண்டிங்

மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

★ எலெக்றிக்கல் வயறிங்

வீட்டுமின்சாரவேலை,மின்சாரப்பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்
காலம்-: 2 மாதம்

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP

காலம் 4 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்: 23.04.90 [கிழமை நாட்கள்]
21.04.90 [சனி, ஞாயிறு]

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி,(தெயில்வேகடவை அருகாமையில்) யாழ்ப்பாணம்

04169


## நீர்விநியோகம்-தற்காலிக இடைநிறுத்தம்

வேர்படி வீதிச்சந்தியில், பிரதான நீர்விநியோகக் குழாயில் சில திருத்தவேலைகள் செய்யவேண்டியிருப்பதால் இன்று 18-04:1990ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 6.00 மணி தொடக்கம் 19.04; 1990ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 6.00 மணி வரை குருநகர், ஆஸபத்திரி, நவீன சந்தை ஆகிய பகுதிகளுக்கு நீர்விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தம செய்யப்படுமென்பதை அப்பகுதி மக்களுககு அறியத்தருகின்றேன்.

(வி. பி. பாலசிங்கம்)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
17.04.1990.

04171

# வெளிமாவட்ட மாணவர் யாழ். வருகை அதிகரிப்பு

பிறமாவட்டங்களில் இருந்து கல்வி நோக்கத்திற்காக யாழ். நகருக்கு வரும் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னர் ஆகிய மாவட்டங்களில் இருந்தே கூடுதலான மாணவர்கள் கல்விக்காக யாழ். நகருக்கு வந்துள்ளார்கள்.

ஒருசில தனியார் கல்வி நிலையங்களில் 95 சதவீதமானவர்கள் பிறமாவட்டங்களில் இருந்து வந்தவர்களாவர்,

இங்கு கல்விகற்கவரும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாக உள்ள போதும் அதற்குச் சமமாக பெண்களின் தொகையும் தற்போது அதிகரித்து வருகின்றது.

இங்கு கல்வி கற்கும் இம் மாணவர்களில் 65 சதவீதமானவர்கள் விடுதிகளிலே தங்கி கல்வி கற்றுவருகிறுர்கள் என்பது குறிப்பிடத்தக்கது, (03)

## மெதடிஸ்த ஹாட்லி 6-ம் ஆண்டு அனுமதி மேமுதல் வாரத்திற்குள்

வடமராட்சி மெதடிஸ்த கல்லூரி, ஹாட்லிக் கல்லூரிகளில் மேமுதல் வாரத்தினுள் ஆண்டு ஆறு அனுமதிகள்யாவும் முடிக்கப்பட வேண்டுமென யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்,

இவ் அனுமதி முதலில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும் அதன் பின்னரே தகுதியடிப்படையிலும் தெரிவுசெய்யப்பட்டோர்களுக்கும் வழங்கப்படும் இதற்கென ஒரு சிறந்த குழு தெரிவு செய்யப்படும். (3)

## அன்னை பூபதி நினைவாக வடமராட்சியில் இன்று கூட்டம்

வடமராட்சியில் இன்று அன்னைபூபதி நினைவாக எழுச்சி ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் இடம் பெறவுள்ளன.

இதே சமயம் இதுவரை வல்வெட்டித்துறை நெல்லியடி பருத்தித்துறை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த தொடர்ச்சியான உண்ணுவிரதங்களும் இன்றுடன் முடித்து வைக்கப்படவுள்ளன.

வடமராட்சி விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி அமைப்பாளர் குணம் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்றும் இன்றுநடைபெறவுள்ளது(39)

## ?-ம்தவணை இரு நேரப்பாடசாலை திணைக்களம் கண்காணிக்கும்

இரண்டாம் தவணை தொடக்கம் அமுலுக்குவரும் இருநேரப்பாடசாலை நேரங்களை சகல பாடசாலைகளும் ஒழுங்காக நடைமுறைப்படுத்தவேண்டுமென அறிவிக்கப் படடுள்ளது.

க. பொ த உயர்தர வகுப்புகள் உள்ள பாடசாலைகள் மட்டுமே இருநேரப்பாடசாலைகளாக இயங்கும் மற்றவை வழமைபோல் இயங்கும்,

பாடசாலை நேரங்கள் யாவும் சரியாக அமுல்படுத்த வேண்டுமென்றும் இவ்விடயத்தில் யாழ்கல்வித்திணைக்களம் கூடியகவன மெடுக்கு மென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

## திறமைமிக்க பாடசாலை அதிபர்களுக்கு ஜனதிபதி விருது

அடுத்த வருடம் முதல் திறமைமிக்க பாடசாலை அதிபர்களுக்கு ஜனதிபதிவிருது வழங்கபபடும் புதிய முறையை கல்வி அமைச்சு நடைமுறைப் படுத்தஉள்ளது.

திறமையான அதிபர்கள் அம்மாகாணத்தின் கல்வி அமைச்சர், கல்விப்பணிப்பாளர்கள் ஊடாகத் தெரிவு செய்யப்படுவர், மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறு, வரவு, பாடசாலை அபிவிருத்தி ஆகிவற்றைக் கொண்டே திறமையான அதிபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்,

## புதுவருட விசேட ரயில் சேவை வடக்கில் அதிகரிக்கப்படவில்லை

இலங்கையின் மற்றையபாகங்களில் புதுவருடரயில் சேவை அதிகரிக்கப்பட்டபோதும் வடபகுதியில் இச்சேவை அதிகரிக்கப்படவில்லை எனதெரிவிக்கப் படுகின்றது,

நேற்று முன்தினம் இரு நூறுக்கும் மேற்பட்ட பயணிகள் கொழும்பு செல்வதற்காக யாழ் புகையிரத நிலயத்திற்கு வந்து ரயிலில்' நிற்பதற்கு கூட இடம் இல்லாமல் திரும்பிச் சென்றனர்.

கடந்த ஒரிருதினங்களாக கொழும்பு செல்வதற்கான பயணிகளின் தொகை அதிகரித்துள்ளது. இதனுலே ரயிலில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது (03)

## மாணவர் அனுமதி "டோனேசன்" அறவிடப்படுவது ஒழிக்கப்படும்

மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்காக பணம் அறவிடப்படும் முறை ஒழிக்கப்படவுள்ளது. பாடசாலையின் அபிவிருத்திக்கென கூறப்பட்டே இவ்வாறு பணம் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர் காலத்தில் பெற்ருேர்கள் தமது பிள்ளைகளை தாம் விரும்பிய பாடசாலைகளில் சேர்ப்பதற்காக கொடுக்கும் பணத்தை புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மாகாணக்கல்வி நிதியத்திற்கு வழங்கலாம். இந்நிதியம் குறிப்பிட்டஅந்தப் பாடசாலையின் அபிவிருத்திக்கு பணத்தை வழங்கும்

இந்த மாகாணகல்வி நிதியம் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பிலேயே இயங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

## யாழ் காங்கேசன் ரயில் பாதை திருத்தியமைக்க கனேடிய நிதி

கடந்தமூன்று வருடங்களாக பாவனைக்குடபடுத்தப் படாது சேதமடைந்த நிலையில் இருந்த யாழ்-காங்கேசன் ரயில் பாதையை திருத்தி அமைக்க கனேடிய அரசு நிதி வழங்கியுள்ளது.

பதினெட்டுக் கிலோ மீட்டர் தூரமான இந்த ரயில் பாதையை திருத்தி அமைக்ககனேடிய அரசு ஒன்ரரைக்கேயடி டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

### மட்டக்களப்பு...

தத்தடை எடுக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் கோரிக்கையை அடுத்தே பெருந்தெருக்கள் திணைக்களம் இவ் வேகத்தடையை நீக்கியுள்ளது (05)

### வனனி...

காலமாக இந்தக் கட்டிடம் பாதுகாப்புப்படையினருடைய தேவைக்காகவே பயன் படுத்தப்பட்டு வருகின்றமை தெரிந்ததே

பொலிஸ் நிலையம் எங்கு இயங்கு மென்பது இன்னமும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. (11)

விடுதலைப் புலிகளின் கலாசாரப் பிரிவு வழங்கும்

## தேனிசை செல்லப்பாவின் எழுச்சிப்பாடல் நிகழ்ச்சி



தமிழ் நாட்டின் தேனிசை செல்லப்பாவின் தமிழிசை எழுச்சிப்பாடல் இசை நிகழ்ச்சி 23ம் திகதி திங்கட்கிழமை யாழ் முற்றவெளிமைதானத்தில் மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது.

மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொள்வார்கள் இவர் தமிழீழம் பற்றி 30 வருடங்களுக்கு முன்னரே பாடியதால் இந்தியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டார். இன்று வடக்கு கிழக்குப் பகுதிகளில் கேட்கும் புரட்சிப்பாடல்களான "தமிழீழ கீதங்கள் பயல் காலராகங்கள்" "அன்நியர் வந்த புகழ் என்ன நீதி" என்ற இசை நாடகங்களுக்கு இசையொடுத்து பாடியவர் இவரே ஆவர். கடந்த சில வருடங்களாக தமிழீழப் பாடல் பாடியதால் இந்திய அரசால் நியாயபூர்வமாக வழங்கப்பட வேண்டிய தூரதர்ஷன் வானெலி சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்டன இவரது மற்றுமோர் நிகழ்ச்சி 24ந் திகதி புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் 16 நிகழ்ச்சிகளை இவர் நடாத்தவுள்ளார் நிகழ்ச்சிகளுக்கான சகல ஒழுங்குகளையும் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் பிரசாரப்பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்,

## கீரிமலைகாங்கேசன் பாதை பாவிப்பு

கீரிமலை காங்கேசன் வீதி மீண்டும் பொது மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப் படுகிறது இப்பாதை இதுவரை காலமும் காவல் படையினரால் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டிருந்தது.

## வன்னி எம். பி நிதி ஒதுக்கீடு

தனது வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் இவ்வருடம் வவுனியா மாவட்டத்திற்கு அபிவிருத்திக்கென 15லட்சம் ரூபாவினை ஒதுக்கியிருப்பதாக வன்னி எம். பி திருமதி. புலேந்திரன் கூறினர்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (11)

### கிராமசேவகர்...

தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அங்கு தெரிவிக்கையில் ஒவ்வொரு கிராம சேவையாளரும் தமது பகுதியில் நிரந்தரமாக இருக்க வேண்டும்கிராமசேவையாளர்கள் அனைவரும் தமது கடமை நேரங்களை மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும்.

கடமை நேரத்தில் மது போதையில் இருக்கக்கூடாது நிவாரண வேலைகள் குழு ரீதியாகவே நடைமுறைப்படுத்த வேண்டும்.

பொது மக்கள் கிராம சேவையாளர்களின் ஊழல்களை கண்டு தெரிவித்தால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (03)

### 1954றகு...

முடிவடைவதனுலே மேற்படி நிலை தோன்றியுள்ளது.

1954ம் ஆண்டுக்கு பின்னர் பிறந்தவர்களுக்கான பிறப்புச் சாட்சிப்பத்திரம் எழுதும் ஒரு பக்கபத்திரம்மட்டுமே கையிப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (03)

### மருதிலை ...

பட்ட ஏனைய யாழ் மாவட்ட வைத்தியசாலைகளின் நீராவி அடுப்புகள் மீண்டும் தனியார் திருத்தும் ஸ்தாபனங்களால் சீர் திருத்தம் செய்யப்பட்டு இயங்கத் தொடங்கியுள்ளன. மேற்படி அடுப்பு இயங்கத் தொடங்கினுல் சுகாதார முறைப்படியான உணவுச்சாமான்களையும் துரிதகதியில் உணவு தயாராக்கவும்உதவியாகஇருக்கும் என மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (39)

## வட-கிழக்கு மறுசீரமைப்புக்கு 50 கோடிடாலர் வெளிநாட்டுதவி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மறுவாழ்வு மறுசீரமைப்புப் பணிகளை உடனே ஆரம்பிப்பதற்கு விடுதலைப்புலிகள் ஆதரவளிக்க உறுதி கூறியுள்ளதால், அரசாங்கம் இவ்விரு மாகாணங்களிலும் மறுவாழ்வு மறுசீரமைப்புப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க ஆர்வம் கொண்டுள்ள இப்பணிகளுக்கு பெருந்தொகை நிதியை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது அன்பளிப்பு நாடுகளும் மிதந்த ஆர்வம் கொண்டுள்ளன.

இப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக பிரான்ஸ், இங்கிலாந்து, சுவீடன், நோர்வே, நெதர்லாந்து, அமெரிக்கா போன்ற ஆறு மேற்குலக நாடுகள் 50 கோடி டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது (சுமார் 2000 கோடி ரூபா)

பணம் சரியாக பயன்படுத்தப்படுமா என்ற சந்தேகத்தில் நிதி உதவி வழங்கத் தயங்கிய நாடுகள் தற்போது அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும்இவ் சமாதான நிலையைத் தொடர்ந்து நிதிஉதவி வழங்க முன்வந்துள்ளன

### பயிலுநர்...

ளுக்கு நியமனம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவிருக்கின்றன(03)

### ஐ தே. கட்சி...

அத்துடன் வன்னிப்பகுதி கலை கலாசராத்தினைப் பிரதிபலிக்கும் ஊர்தியும் இடம் பெறும்.

இத்தகவலை வவுனியா மாவட்ட மேற்படி கட்சி அமைபாளர்களில் ஒருவரான திரு எஸ். பி. சாந்தகுமார் தெரிவித்தார், [11]

## தடை

சங்கானைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி. விற்பனை, சட்டவிரோத மின்[illegible], சட்ட விரோத இறச்சிக் கடை ஆகிய வற்றிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தடை விதித்துள்ளனர்.

கடந்த 15ம் திகதி முதல் இத்தடை அமுலுக்கு வருவதாகவும் மீறு வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ''புலிகளின் குரல்'' விளம்பரப் பலகையில் இது பற்றிய அறிவித்தல் காணப் பட்டது (13)

## கலைவிழா

மட்டக்களப்பு மாவட்டக் கலைவிழா இம்மாதம் 25ம் திகதி மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதனும், வட கிழக்கு மாகாண கலாசார உதவிப் பணிப்பாளர் திரு. எதிர்மன்ன சிங்கமும் கலந்து கொள்வர்.

இப்பத்திரிகை முரசொலி பப்லிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஆ இலக்கத்திலுள்ள அச்சகப்'பிரிவில் 18-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது